CAREERINDIA

No. of Printed Pages : **16**

**6703**

பதிவு எண்
Register Number

# PART - III

# வரலாறு / HISTORY

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Versions)

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

Time Allowed : 3 Hours ] [Maximum Marks : 200

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

## பகுதி - அ / PART - A

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **45x1=45**

(ii) ஒவ்வொரு வினாவிற்கும் **ஒரு** மதிப்பெண்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) **One** mark for each question.

**I.** கொடுக்கப்பட்ட **நான்கு** விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.
Choose the most suitable answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

**1.** பிளாசிப் போர் நடைபெற்ற ஆண்டு :

(அ) 1757 (ஆ) 1764 (இ) 1772 (ஈ) 1777

The Battle of Plassey took place in the year :

(a) 1757 (b) 1764 (c) 1772 (d) 1777

[ திருப்புக / Turn over

www.careerindia.com

CAREERINDIA



2. காரன்வாலிஸ் பிரபு அறிமுகப்படுத்தியது :

(அ) மகல்வாரி முறை (ஆ) நிலையான நிலவரித் திட்டம்

(இ) இரயித்துவாரி முறை (ஈ) ஜாகீர்தாரி முறை

Lord Cornwallis introduced :

(a) Mahalwari System (b) Permanent Revenue Settlement

(c) Ryotwari System (d) Jagirdari System

3. ஹேஸ்டிங்ஸ் பிரபு நேபாளத்தின் மீது போர் தொடுத்த ஆண்டு :

(அ) 1814 (ஆ) 1815 (இ) 1816 (ஈ) 1817

Lord Hastings declared war on Nepal in the year :

(a) 1814 (b) 1815 (c) 1816 (d) 1817

4. 'சதி' வழக்கம் இவரது ஆட்சிக் காலத்தில் ஒழிக்கப்பட்டது :

(அ) வாரன் ஹேஸ்டிங்ஸ் (ஆ) காரன் வாலிஸ் பிரபு

(இ) வெல்லெஸ்லி பிரபு (ஈ) வில்லியம் பெண்டிங் பிரபு

The practice of Sati was abolished during the administration of :

(a) Warren Hastings (b) Lord Cornwallis

(c) Lord Wellesley (d) Lord William Bentinck

5. எந்த மாகாண ஆட்சிக்கு லாரன்ஸ் சகோதரர்கள் சேவையாற்றினார்கள் ?

(அ) பர்மா (ஆ) பஞ்சாப்

(இ) வங்காளம் (ஈ) மைசூர்

Lawrence brothers lent their services in the administration of :

(a) Burma (b) Punjab

(c) Bengal (d) Mysore

6. ஜோனாதன் டங்கன் வடமொழிக் கல்லூரியை நிறுவிய இடம் :

(அ) சென்னை (ஆ) பம்பாய்

(இ) கல்கத்தா (ஈ) பனாரஸ்

Jonathan Duncan established a Sanskrit college at :

(a) Madras (b) Bombay

(c) Calcutta (d) Banaras

www.careerindia.com

CAREERINDIA



7. கலெக்டர் ஜாக்சன் கட்டபொம்மனை வந்து சந்திக்க சொன்ன இடம் :

(அ) மதுரை (ஆ) பாஞ்சாலங்குறிச்சி

(இ) ராமனாதபுரம் (ஈ) ஸ்ரீவில்லிப்புத்தூர்

Collector Jackson sent an order to Kattabomman to meet him at :

(a) Madurai (b) Panchalamkurichi

(c) Ramanathapuram (d) Srivilliputtur

8. பின்வருவனவற்றுள் வேலூர் கலகத்திற்கான காரணம் எது ?

(அ) வாரிசு இழக்கும் கொள்கை

(ஆ) கப்பம் வசூலித்தனர்

(இ) புதிய ஆயுதங்களையும் சீருடைகளையும் அறிமுகப்படுத்தியது

(ஈ) பிரிட்டிஷ் ஆட்சியின் பொருளாதார சுரண்டல்

Which among the following was one of the causes for the Vellore Mutiny ?

(a) Doctrine of lapse

(b) Collection of Tributes

(c) Introduction of new army regulations

(d) Economic exploitation of the British rule

9. பின்வருபவர்களில், 1857 -ஆம் ஆண்டு கலகத்தை முதல் இந்திய விடுதலைப்போர் என்று கருதியவர் யார் ?

(அ) சர் ஜான் லாரன்ஸ் (ஆ) வீர சவார்க்கர்

(இ) எஸ்.என். சென் (ஈ) ஆர்.சி. மஜும்தார்

Who among the following considered the Revolt of 1857 as the First War of Indian Independence ?

(a) Sir John Lawrence (b) Vir Savarkar

(c) S.N. Sen (d) R.C. Majumdar

10. இந்தியாவின் முதல் வைஸ்ராய் :

(அ) வாரன் ஹேஸ்டிங்ஸ் (ஆ) டல்ஹவுசி பிரபு

(இ) கானிங் பிரபு (ஈ) ரிப்பன் பிரபு

Name the first Viceroy of India.

(a) Warren Hastings (b) Lord Dalhousie

(c) Lord Canning (d) Lord Ripon

11. பிரம்ம சமாஜம் நிறுவப்பட்ட ஆண்டு :

(அ) 1827 (ஆ) 1828 (இ) 1829 (ஈ) 1838

The Brahmo Samaj was established in the year :

(a) 1827 (b) 1828 (c) 1829 (d) 1838

www.careerindia.com

CAREERINDIA



**12.** இந்திய தேசிய காங்கிரசை தோற்றுவித்தவர் :

(அ) டபிள்யூ.சி. பானர்ஜி (ஆ) ஏ.ஓ.ஹியூம்

(இ) மகாத்மா காந்தி (ஈ) நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்

The Indian National Congress was founded by :

(a) W.C. Banerjee (b) A.O. Hume

(c) Mahatma Gandhi (d) Netaji Subhas Chandra Bose

**13.** சௌரி சௌரா நிகழ்ச்சி நடைபெற்ற ஆண்டு :

(அ) 1920 (ஆ) 1921 (இ) 1922 (ஈ) 1923

The Chauri Chaura incident took place in the year :

(a) 1920 (b) 1921 (c) 1922 (d) 1923

**14.** வேதாரண்யம் உப்பு சத்யாகிரகத்திற்கு தலைமையேற்றவர் :

(அ) காந்தி (ஆ) ராஜாஜி

(இ) வ.உ.சி. (ஈ) காமராஜ்

The Vedaranyam Salt Satyagraha was led by :

(a) Gandhi (b) Rajaji

(c) V.O.C. (d) Kamaraj

**15.** பின்வருவனவற்றுள் பெரியார் தொடங்காத பத்திரிக்கை எது ?

(அ) குடியரசு (ஆ) புரட்சி

(இ) விடுதலை (ஈ) சுயராஜ்யா

Which of the following journal was not founded by Periyar E.V.R. ?

(a) Kudi Arasu (b) Puratchi

(c) Viduthalai (d) Swarajya

**16.** சமய சீர்திருத்த இயக்கத்தின் விடிவெள்ளி எனக் கருதப்படுபவர் :

(அ) எராஸ்மஸ் (ஆ) மார்ட்டின் லூதர்

(இ) ஜான் ஹஸ் (ஈ) ஜான் வைக்ளிப்

Who is considered as the 'Morning Star of the Reformation' ?

(a) Erasmus (b) Martin Luther

(c) John Huss (d) John Wycliffe

www.careerindia.com

CAREERINDIA



17. ரஷ்யாவில் போல்ஷெவிக் கட்சிக்கு தலைமையேற்றவர் :
(அ) கார்ல் மார்க்ஸ் (ஆ) இரண்டாம் சார் நிக்கோலஸ்
(இ) லெனின் (ஈ) ஏங்கல்ஸ்
The Bolshevik Party in Russia was headed by :
(a) Karl Marx (b) Tsar Nicholas II
(c) Lenin (d) Engles

18. ஆட்டோமன் துருக்கியர்கள் கான்ஸ்டான்டிநோபிளைக் கைப்பற்றிய ஆண்டு ?
(அ) 1453 (ஆ) 1533 (இ) 1543 (ஈ) 1443
The Ottoman Turks captured Constantinople in :
(a) 1453 (b) 1533 (c) 1543 (d) 1443

19. பயிர்சுழற்சி முறையை அறிமுகப்படுத்தியவர் :
(அ) ஹெர்வி (ஆ) டவுன்ஷெண்ட்
(இ) மெக் ஆடம் (ஈ) ஹார்கிரீவ்ஸ்
Rotation of crops was introduced by :
(a) Harvey (b) Townshend
(c) Mac Adam (d) Hargreaves

20. கெடுபிடிப்போர் எனும் சொல்லை முதலில் பயன்படுத்தியவர் :
(அ) பெர்னார்ட் பரூச் (ஆ) எப்.டி. ரூஸ்வெல்ட்
(இ) ஸ்டாலின் (ஈ) சர்ச்சில்
The term Cold War was first used by :
(a) Bernard Baruch (b) F.D. Roosevelt
(c) Stalin (d) Churchill

**II. பின்வரும் வாக்கியங்களில் உள்ள கோடிட்ட இடங்களை சரியான விடைகளைக் கொண்டு நிரப்புக.**
**Fill in the blanks with suitable answers :**

21. காரன்வாலிஸ் பிரபு தனது சக பணியாளரான __________ துணையுடன் சட்டத் தொகுப்பை உருவாக்கினார்.
Lord Cornwallis prepared the law code with the help of his colleague __________.

22. மூன்றாம் பானிப்பட்டுப் போர் நடைபெற்ற ஆண்டு __________.
The third Battle of Panipat took place in the year __________.

[ திருப்புக / Turn over

www.careerindia.com

CAREERINDIA



**23.** நவீன அஞ்சல் முறையை தொடங்கி வைத்தவர் _________.

The foundation of modern postal system was laid down by _________.

**24.** மகல்வாரி முறையின் கீழ் நிலவரித் திட்டத்தின் அடிப்படை அலகு _________.

The basic unit of revenue settlement under the Mahalwari System was _________.

**25.** மெக்காலேவின் குறிப்பு வெளியிடப்பட்ட ஆண்டு _________.

The Macaulay's Minute was announced in the year _________.

**26.** பேரரசியின் அறிக்கையை கானிங் பிரபு _________ எனும் இடத்தில் படித்தார்.

The Queen's Proclamation was read by Lord Canning at _________.

**27.** பிரிட்டிஷ் பொதுமக்கள் சபையில் உறுப்பினரான முதல் இந்தியர் _________.

_________ was the first Indian to become a member of the British House of Commons.

**28.** இந்தியாவின் இரும்பு மனிதர் _________.

The Iron Man of India was _________.

**29.** ''சமூக ஒப்பந்தம்'' என்ற நூலின் ஆசிரியர் _________.

_________ was the author of the Book "Social Contract".

**30.** பாசிசம் என்பது _________ என்பவரது கொள்கையாகும்.

Fascism was the principle of _________.

www.careerindia.com

CAREERINDIA



**III.** நிரல் **'அ'** -வின் கீழ் உள்ளவற்றை நிரல் **'ஆ'** உடன் பொருத்துக.

| | **'அ'** | | **'ஆ'** |
|---|---|---|---|
| **31.** | கரீம் கான் | - | (அ) 1930 |
| **32.** | கர்னல் ஜில்லெஸ்பி | - | (ஆ) லியானார்டோ டாவின்சி |
| **33.** | தண்டி யாத்திரை | - | (இ) சீனாவின் விடிவெள்ளி |
| **34.** | இறுதி விருந்து | - | (ஈ) கலகத்தை அடக்கியவர் |
| **35.** | டாக்டர் சன் யாட் சென் | - | (உ) பிண்டாரிகள் |

Match the following items in **'A'** suitably with those in **'B'**.

| | **'A'** | | | **'B'** |
|---|---|---|---|---|
| **31.** | Karim Khan | - | (a) | 1930 |
| **32.** | Col. Gillespie | - | (b) | Leonardo da Vinci |
| **33.** | Dandi March | - | (c) | Morning Star of China |
| **34.** | Last Supper | - | (d) | Suppressed the mutiny |
| **35.** | Dr. Sun Yat Sen | - | (e) | Pindaris |

**IV.** **சரியான** குறிப்பைக் கண்டறிக. **ஒன்று** மட்டுமே சரியானது.
Find out the **correct** statement. **One** Statement alone is correct.

**36.** (அ) வாரன் ஹேஸ்டிங்ஸ் 1774 -ல் வில்லியம் கோட்டையின் ஆளுநராக பதவியேற்றார்

(ஆ) வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆட்சிக் காலத்தில் ரோகில்லாப் போர் நடைபெற்றது

(இ) ஒழுங்குமுறை சட்டத்தின்படி இயக்குநர்கள் மன்றத்தின் ஆயுட்காலம் ஐந்து ஆண்டுகளாகும்

(ஈ) ராஜா செயித் சிங் அயோத்தியின் ஆட்சியாளர் ஆவார்

(a) Warren Hastings assumed the Governorship of Fort William in 1774.

(b) Rohilla War took place during the administration of Warren Hastings.

(c) According to the Regulating Act the term of office of the Court of Directors was five years.

(d) Raja Chait Singh was the ruler of Oudh.



www.careerindia.com

CAREERINDIA



37. (அ) லிட்டன் பிரபுவின் ஆப்கானிய கொள்கையை பின்பற்றும்படி ரிப்பன் பிரபு அறிவுறுத்தப்பட்டார்

(ஆ) நாட்டு மொழி செய்தித்தாள் சட்டத்தை ரத்து செய்து இந்தியர்களிடையே ரிப்பன் பிரபு புகழ் பெற்றார்

(இ) ரிப்பன் பிரபு கல்வி சீர்திருத்தங்களில் சொற்ப கவனமே செலுத்தினார்

(ஈ) 1882 -ல் ரிப்பன் பிரபு தொழிற்சாலை சட்டத்தை அறிமுகப்படுத்தினார்

(a) Lord Ripon was asked to follow the Afghan policy of Lord Lytton.

(b) Lord Ripon earned popularity among the Indians by repealing the Vernacular Press Act.

(c) Lord Ripon gave scant attention to educational reforms.

(d) Lord Ripon introduced the Factory Act in 1882.

38. (அ) ஜனாதிபதி நாட்டின் அரசியலமைப்பு ரீதியான தலைவர்

(ஆ) துணை ஜனாதிபதியை தலைவராகக் கொண்டு திட்டக்குழு ஏற்படுத்தப்பட்டது

(இ) இந்திராகாந்தி அணு ஆய்வு மையம் நெய்வேலியில் உள்ளது

(ஈ) ஐ.எஸ்.ஆர்.ஓ. (இஸ்ரோ) ஏவுகணை மையம் மங்களூரில் உள்ளது

(a) The President is the Constitutional head of the state.

(b) The Planning Commission was established with the Vice-President as its Chairman.

(c) The Indira Gandhi Centre for Atomic Research is situated in Neyveli.

(d) ISRO satellite centre is at Mangalore.

39. (அ) எதிர்சமய சீர்திருத்த இயக்கம் புராட்டஸ்டண்டுகளால் துவக்கப்பட்டது

(ஆ) இக்னேஷியஸ் லயோலாவின் சீடர்கள் கல்வியைப் பரப்பினார்கள்

(இ) டிரன்ட் சபை எட்டாம் ஹென்றியால் கூட்டப்பட்டது

(ஈ) எதிர்சமய சீர்திருத்த இயக்கத்தின்போது தயாரிக்கப்பட்ட அட்டவணையில் விவிலியமும் இடம் பெற்றிருந்தது

(a) The Counter Reformation was launched by the Protestants.

(b) The followers of Ignatius Loyola contributed for the spread of education.

(c) The Trent Council was convened by Henry VIII.

(d) During the Counter Reformation an Index consisting of the list of good books was issued by the Church.

www.careerindia.com

CAREERINDIA



40. (அ) செப்டம்பர் 1, 1940 -ல் ஹிட்லர் போலந்தின் மீது படையெடுத்தார்

(ஆ) டிசம்பர் 1941 -ல் ஜப்பான் பேர்ல் துறைமுகத்தை தாக்கியது

(இ) செப்டம்பர் 1945 -ல் இத்தாலி சரணடைந்தது

(ஈ) மே 2, 1944 -ல் ரஷ்ய துருப்புகள் பெர்லின் நகரில் நுழைந்தன

(a) Hitler invaded Poland on September 1, 1940.

(b) In December 1941, Japan attacked the Pearl Harbour.

(c) In September 1945 Italy surrendered.

(d) On 2 May, 1944 Russian army entered Berlin.

V. கீழ்க்காணும் கூற்றுகளில் **எது சரி, எது தவறு** என்பதனைக் குறிப்பிடுக.

State whether the following statements are **True** or **False**.

41. 1802 -ல் இரண்டாம் பாஜிராவ் பசீன் உடன்படிக்கையில் கையெழுத்திட்டார்.

Baji Rao signed the Treaty of Bassein in 1802.

42. இராமகிருஷ்ணரின் உண்மையான பெயர் நரேந்திரநாத் தத்தா.

The original name of Shri Ramakrishna was Narendranath Dutta.

43. இலவச மற்றும் கட்டாயக் கல்வியை நீதிக்கட்சி அறிமுகம் செய்தது.

Justice Party introduced Free and Compulsory Education.

44. 1598 -ல் வாஸ்கோடகாமா இந்தியாவை வந்தடைந்தார்.

Vasco da Gama reached India in 1598.

45. 'மெய்ன் கேம்ப்' என்ற நூலை ஹிட்லர் எழுதினார்.

Hitler was the author of 'Mein Kamph'.



www.careerindia.com

CAREERINDIA



## பகுதி - ஆ / PART - B

VI. குறிப்பு : (i) **ஏதேனும் பதினைந்து** வினாக்களுக்கு மட்டும் சிறு குறிப்பு வரைக. **15x3=45**

(ii) ஒவ்வொன்றிற்கும் **மூன்று** குறிப்புகள் அளித்தல் வேண்டும்.

**Note :** (i) Write short notes on **any fifteen** of the following.

(ii) Write only **three** points for each.

**46.** ரோகில்லா போர்
Rohilla War

**47.** ஸ்ரீரங்கபட்டிணம் உடன்படிக்கை
Treaty of Srirangapattinam

**48.** சதி
Sati

**49.** டல்ஹவுசியின் அஞ்சல்துறை சீர்திருத்தங்கள்
Dalhousie's Postal Reforms

**50.** இரயத்துவாரி முறை
Ryotwari Settlement

**51.** பர்தா முறை
Purdah System

**52.** புலித்தேவர்
Puli Thevar

**53.** கர்னல் ஜில்லஸ்பி
Col. Gillespie

**54.** கொழுப்பு தடவப்பட்ட துப்பாக்கி தோட்டாக்கள்
Greased Cartridges

**55.** நாட்டு மொழி செய்தித்தாள் சட்டம்
The Vernacular Press Act

**56.** சுவாமி விவேகானந்தர்
Swami Vivekananda

**57.** இந்திய தேசிய காங்கிரஸ்
Indian National Congress

**58.** இந்திய தேசிய இராணுவம்
Indian National Army

**59.** இட ஒதுக்கீட்டு அரசு ஆணை
Communal G.O.

www.careerindia.com

CAREERINDIA



60. பஞ்சசீலம்
Panch Sheel

61. மறுமலர்ச்சியின் பொருள்
Meaning of Renaissance

62. பாஸ்டன் தேநீர் விருந்து
Boston Tea Party

63. ஜான் மெக்ஆடம்
John McAdam

64. நாசிசம்
Nazism

65. உலக வர்த்தக அமைப்பு
World Trade Organization

## பகுதி - இ / PART - C

VII. **குறிப்பு :** (i) பின்வருவனவற்றில் ஏதேனும் **பத்து** வினாக்களுக்கு மட்டும் விடை தருக. அவற்றில் வினா எண் 77-க்கு **கட்டாயமாக** விடையளித்தல் வேண்டும். **10x6=60**

(ii) ஒவ்வொரு வினாவிற்கும் **100** வார்த்தைகளுக்கு மிகாமல் விடை தருக.

**Note :** (i) Answer **any ten** questions of the following including question no. 77 which is **compulsory.**

(ii) Answer in not more than **100** words each.

66. (அ) ஒழுங்குமுறை சட்டத்தின் முக்கிய விதிமுறைகள் பற்றி விவாதிக்க.

**அல்லது**

(ஆ) காரன்வாலிஸ் பிரபுவின் நீதித்துறை சீர்திருத்தங்களை எழுதுக.

(a) Discuss the main provisions of the Regulating Act.

**OR**

(b) Write the judicial reforms of Lord Cornwallis.

67. (அ) துணைப்படைத் திட்டத்தின் முக்கிய கூறுகளை குறிப்பிடுக.

**அல்லது**

(ஆ) மராட்டிய கூட்டிணைவின் வீழ்ச்சிக்கான காரணங்களைக் குறிப்பிடுக.

(a) Point out the main features of the Subsidiary System.

**OR**

(b) Mention the causes for the downfall of the Maratha Confederacy.



www.careerindia.com

CAREERINDIA



68. (அ) வாரிசு இழக்கும் கொள்கையின் கருத்து மற்றும் நடைமுறை பற்றி எழுதுக.

**அல்லது**

(ஆ) நிலையான நிலவரித் திட்டத்தின் சிறப்புக் கூறுகளை குறிப்பிடுக.

(a) Explain the principle and application of the Doctrine of Lapse.

**OR**

(b) Point out the salient features of the Permanent Land Revenue.

69. (அ) 1801 -ஆம் ஆண்டு தென்னிந்திய கலகத்தைப் பற்றி ஒரு குறிப்பு வரைக.

**அல்லது**

(ஆ) வேலூர் கலகத்தின் போக்கினை விவரி.

(a) Write a note on South Indian Rebellion of 1801.

**OR**

(b) Explain the course of the Vellore Mutiny.

70. (அ) உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியத்துவத்தைப் பற்றி விவாதிக்க.

**அல்லது**

(ஆ) இராமலிங்க அடிகளின் கொள்கைகளை விவரி.

(a) Discuss the Importance of Local Self-Government.

**OR**

(b) Discuss the principles of Saint Ramalinga.

71. (அ) மிதவாதிகளின் கோரிக்கைகள் பற்றிய ஒரு குறிப்பு எழுதுக.

**அல்லது**

(ஆ) சுதேசி இயக்கத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துக.

(a) Write a note on the main demands of the moderates.

**OR**

(b) Bring out the importance of the Swadeshi Movement.

www.careerindia.com

CAREERINDIA



**72.** (அ) ஜாலியன் வாலா பாக் படுகொலை பற்றி குறிப்பு எழுதுக.

**அல்லது**

(ஆ) தேசிய இயக்கத்தில் வ.உ.சியின் பங்கினைப் பற்றி விவாதிக்க.

(a) Write a note on the Jallianwala Bagh massacre.

**OR**

(b) Discuss the role of V.O.C. in the Indian National Movement.

**73.** (அ) 1858 -ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தின் முக்கியத்துவத்தை குறிப்பிடுக.

**அல்லது**

(ஆ) இந்திய அயலுறவுக் கொள்கையின் முக்கிய கூறுகளை குறிப்பிடுக.

(a) Point out the importance of the Government of India Act of 1858.

**OR**

(b) Mention the important features of India's foreign policy.

**74.** (அ) புவியியல் கண்டுபிடிப்புகளுக்கான காரணங்களை ஆய்க.

**அல்லது**

(ஆ) பிலடெல்பியா மாநாடு பற்றி குறிப்பு வரைக.

(a) Analyse the causes for the geographical discoveries.

**OR**

(b) Write a note on the Philadelphia Congress.

**75.** (அ) தொழிற் புரட்சிக்கான காரணங்களை கூறுக.

**அல்லது**

(ஆ) ரஷ்யப் புரட்சியில் லெனினின் பங்கினைக் குறித்து விவாதி.

(a) Examine the causes for the Industrial Revolution.

**OR**

(b) Discuss the role of Lenin in the Russian Revolution.



www.careerindia.com

CAREERINDIA



76. (அ) ஹிட்லரின் அயல்நாட்டுக் கொள்கையை விவாதி.

**அல்லது**

(ஆ) மா சே துங் பற்றி ஒரு குறிப்பு வரைக.

(a) Discuss the foreign policy of Hitler.

**OR**

(b) Write a note on Mao Tse Tung.

77. (அ) ஐ.நா. சபையின் நோக்கங்களைக் குறிப்பிடுக.

**அல்லது**

(ஆ) சோவியத் யூனியன் கலைக்கப்பட்டதை சுருக்கமாக கூறுக.

(a) State the aims of the United Nations.

**OR**

(b) Briefly mention the dissolution of the Soviet Union.

## பகுதி - ஈ / PART - D

**VIII. குறிப்பு :** (i) **ஏதேனும் ஐந்து** வினாக்களுக்கு விடை தருக. அவற்றுள் வினா எண் **84** -க்கு **கட்டாயமாக** விடை தருதல் வேண்டும். **5x10=50**

(ii) ஒவ்வொரு வினாவிற்கும் **200** வார்த்தைகளுக்கு மிகாமல் விடை தருக.

**Note :** (i) Answer **any five** questions including Q. No. **84** which is **compulsory.**

(ii) Answer should not exceed **200** words each.

78. (அ) வாரன் ஹேஸ்டிங்ஸின் சீர்திருத்தங்களை தொகுத்துக் கூறுக.

**அல்லது**

(ஆ) 'பெண்டிங் பிரபு சமூக சீர்திருத்தங்கள் காலத்தை தொடங்கி வைத்தார்' - கருத்துக் கூறுக.

(a) Give an account of the reforms of Warren Hastings.

**OR**

(b) "Bentinck inaugurated an era of social reforms" - Comment.

www.careerindia.com

CAREERINDIA



**79.** (அ) 1857 -ஆம் ஆண்டு கலகத்துக்கான காரணங்களை ஆய்க.

**அல்லது**

(ஆ) 'இராஜா ராம்மோகன் ராய் இந்திய மறுமலர்ச்சியின் தந்தை' - வாதிடுக.

(a) Examine the causes for the Revolt of 1857.

**OR**

(b) "Raja Rammohan Roy was the father of Indian Renaissance" - Discuss.

**80.** (அ) இந்திய விடுதலை இயக்கத்தில் மகாத்மா காந்தியின் பங்கினை ஏதேனும் ஐந்து தலைப்புகளில் மதிப்பிடுக.

**அல்லது**

(ஆ) விடுதலை இயக்கத்தில் தமிழ்நாட்டின் பங்கினை ஆய்க. (ஏதேனும் ஐந்து தலைப்புகள்)

(a) Estimate the role of Mahatma Gandhi in the Indian Freedom Struggle in any five headings.

**OR**

(b) Examine the role of Tamilnadu in the Indian Freedom struggle in any five headings.

**81.** (அ) தமிழகத்தில் நீதிக்கட்சியின் சாதனைகளை ஆய்க.

**அல்லது**

(ஆ) 'ஜவஹர்லால் நேரு நவீன இந்தியாவின் சிற்பி'' எனக் கருதப்படுகிறார் - கருத்துக் கூறுக.

(a) Examine the achievements of the Justice Party rule in Tamil Nadu.

**OR**

(b) "Jawaharlal Nehru is the architect of modern India" - Discuss.

**82.** (அ) ஜெர்மனியில் சமயச்சீர்திருத்த இயக்கத்திற்கு மார்டின் லூதரின் பங்களிப்பை ஆய்க.

**அல்லது**

(ஆ) 1789 -ஆம் ஆண்டு பிரஞ்சுப் புரட்சிக்கான காரணங்களை ஆய்க.

(a) Analyse the contribution of Martin Luther for the Reformation in Germany.

**OR**

(b) Examine the causes of the French Revolution of 1789.

[ திருப்புக / Turn over

www.careerindia.com

CAREERINDIA



**83.** (அ) தொழிற்புரட்சியின் நன்மை, தீமைகளை ஆய்க.

**அல்லது**

(ஆ) இரண்டாம் உலகப் போருக்கான காரணங்களை தொகுத்து எழுதுக.

(a) Analyse the merits and demerits of the Industrial Revolution.

**OR**

(b) Give an account of the causes of the Second World War.

**84.** (அ) (i) இந்திய வரைபடத்தில் கீழ்கண்ட இடங்களைக் குறிக்கவும்.

(அ) சூரத்
(ஆ) தஞ்சாவூர்
(இ) பாட்னா
(ஈ) வங்காளம்
(உ) மைசூர்

(ii) வெல்லெஸ்லி பிரபுவின் கீழ் இருந்த ஆங்கில பேரரசினை வரைக.

**அல்லது**

(ஆ) 1900 முதல் 1950 வரை நடைபெற்ற இந்திய விடுதலைப் போர் நிகழ்ச்சிகளில் ஐந்தினை காலக்கோடு காட்டி வரைக.

**அல்லது**

(இ) முதல் உலகப்போரின் முக்கிய ஐந்து நிகழ்வுகளைக் குறிக்கும் காலக்கோட்டினை வரைக.

(a) (i) Mark the following five places in the outline Map of India.

(A) Surat
(B) Tanjore
(C) Patna
(D) Bengal
(E) Mysore

(ii) Point out the British possessions under Lord Wellesley.

**OR**

(b) Draw a time-line for the freedom movement from 1900 to 1950, pointing out five important events of that period.

**OR**

(c) Draw a time-line of the First World War pointing five important events of that war.

- o 0 o -

www.careerindia.com